# பெப்ரவரி – 23 – வெள்ளி

தூய பொலிக்காப்

**“மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும்.”**
**மத் 5:20**

## முதல் வாசகம் : ஏசேக்கியல் 18 : 21 – 28

தீயவரோ தாம் செய்த பாவங்கள் அனைத்தையும் விட்டு மனம் மாறி, என் நியமங்கள் அனைத்தையும் கைக்கொண்டு, நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால் அவர்கள் வாழ்வது உறுதி, அவர்கள் சாகார்.அவர்கள் இழைத்த தவறுகள் அனைத்தும் அவர்களுக்கெதிராக நினைக்கப்படமாட்டா. அவர்கள் கடைப்பிடித்த நேர்மையின் பொருட்டு அவர்கள் வாழ்வர்.உண்மையில், பொல்லாரின் சாவையா நான் விரும்புகிறேன்? அவர்கள் தம் வழிகளினின்று திரும்பி வாழ வேண்டும் என்பதன்றோ என் விருப்பம்? என்கிறார் தலைவராகிய ஆண்டவர்.நேரியவர் தம் நேரிய நடத்தையினின்று விலகி, தவறிழைத்து, பொல்லாரைப் போல் வெறுக்கத் தக்கவற்றை எல்லாம் செய்தால், அவர்கள் வாழ்வரோ? அவர்கள் கடைப்பிடித்த நேர்மையானதெதுவும் நினைக்கப்படமாட்டாது. அவர்கள் இழைத்த துரோகத்தின் பொருட்டும், செய்த பாவத்தின் பொருட்டும் அவர்கள் சாவர்.ஆயினும், ”தலைவரின் வழி செம்மையானதாக இல்லை” என்று நீங்கள் சொல்கிறீர்கள். இஸ்ரயேல் வீட்டாரே! கேளுங்கள். என் வழியா நேர்மையற்றது? உங்கள் வழிகளன்றோ நேர்மையற்றவை!நேரியவர் தம் நேரிய நடத்தையினின்று விலகி, தவறிழைத்தால், அவர்கள் தாம் இழைத்த தவற்றின் பொருட்டுச் சாவர்.பொல்லார் தாம செய்த பொல்லாப்பினின்று விலகி, நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால், தம் உயிரை அவர்கள் காத்துக் கொள்வர்.அவர்கள் உண்மையைக் கண்டுணர்ந்து, தாம் செய்த குற்றங்கள் அனைத்தினின்றும் விலகி விட்டால், அவர்கள் வாழ்வது உறுதி அவர்கள் சாகமாட்டார்.

**பதில்பாடல் :** நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால் யார்தான் நிலைத்து நிற்கமுடியும்

## நற்செய்தி : மத்தேயு5 : 20–26

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது: மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும். இல்லையெனில், நீங்கள் விண்ணரசுக்குள் புக முடியாது என உங்களுக்குச் சொல்கிறேன். ”கொலை செய்யாதே் கொலை செய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்” என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் ”தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார் தம் சகோதரரையோ சகோதரியையோ ”முட்டாளே” என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார் ”அறிவிலியே” என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார். ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள். உங்கள் எதிரி உங்களை நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லும் போது வழியிலேயே அவருடன் விரைவாக உடன்பாடு செய்து கொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் எதிரி நடுவரிடம் உங்களை ஒப்படைப்பார். நடுவர் காவலரிடம் ஒப்படைக்க, நீங்கள் சிறையில் அடைக்கப்படுவீர்கள். கடைசிக் காசு வரை திருப்பிச் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேற மாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன்“ என்றார்.

**தியானம்:** தவக்காலம் எனும்போது நாம் தவமிருத்தல் அதாவது, ஒறுத்தல் முயற்சிகள் மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணமே பொதுவாக நமக்குள் தோன்றும். உண்மைதான். ஆனால், நாம் ஏன் நோன்பிருக்க வேண்டும்? நாம் பசியாயிருப்பதில் கடவுளுக்கு என்ன திருப்தி? நம்மை நாமே வருத்திக் கொள்வதில் கடவுளுக்கு என்ன மகிழ்ச்சி? என்று நம் மனதில் சஞ்சலங்கள் எழலாம். நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்பதற்காவே கடவுள் நம்மைப் படைத்தார். நாம் மகிழ்சிசியுடனும், சுததந்திரமாவும் வாழவேண்டும் என்றே கடவுள் மனுவுரு எடுத்து, தமது நற்செய்தியைக் இவ்வுலகிற்குக் கொண்டு வந்தார். ஆனால், உண்மை மகிழ்ச்சி என்னவென்று அறியாமல் நம் மனம் விரும்பும் காரியங்களை எல்லாம் மகிழ்வென்று எண்ணி அவற்றின் பின்னால் அலைகின்றோம். மனிதருக்கு நித்திய பேரின்பம் தரும் நற்செய்தியினை நாம் ஏற்றுக்கொள்ளாமல் பாவத்திற்கு அடிமைகளாகி சிற்றின்பங்களில் மூழ்கிவிடுவதே மனித இயல்பு. இந்த மனித இயல்பை நன்கறிந்த நம் விண்ணகத் தந்தை, நாம் மனம் வருந்தி, மனந்திரும்பும் வேளைகளிலெல்லாம் நம்மை மன்னிக்கத் தயாராக இருக்கின்றார் என்பதை அடையாளப் படுத்துவதே இந்தத் தவக்காலம். எனவே, நாம் செய்யும் தவ முயற்சிகள், ஒறுத்தல்கள் யாவும் நாம் மனந்திரும்ப விரும்புகின்றோம் என்பதன் அடையாளமாக இருக்கவேண்டுமே தவிர, நாம் செய்யும் பாவங்களுக்கு அவை பண்டமாற்றுக்கள் அல்ல என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். மேலங்கி தரித்து பிறர் என்ன செய்யவேண்டும் எனப் பறைசாற்றித் திரிவதே பரிசேயர், மறைநூல் அறிஞர், குருக்களின் நெறி. ஆனால், பிறரைத் தங்களிலும் இழிவாக எண்ணாமை, சினம் கொள்ளாமை, பிறருடன் நல்லுறவு ஏற்படுத்த முயலுதல் போன்ற நற்காரியங்களில் ஈடுபடும் நெறியையே இன்று இறைமகன் இயேசு நமக்கு முன்வைத்துள்ளார். இவையே நமது தவ முயற்சிகளாக அமைவனவாக!